Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC.11/2023 SPLITUP FROM CC No. 175/2015

Evidence recorded u/s 299 crpc

| | | |
|---|---|---|
| | | Prosecution PW 2 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | நஜ்முனிசா |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 19.03.2024

**எதிரிகள் 4 மற்றும் 5 மீது பிடிகட்டளை நிலுவையில் உள்ளது.**

**முதல் விசாரணை**

நான் மாவடியான் கோவில் தெருவில் குடியிருந்து வீட்டில் இல்லத்தரசியாக இருந்துக வருகிறேன். அ.சா.1 எனது கணவர் ஆவார். எதிரிகளை எனக்கு தெரியும். எனது கணவர் அ.சா.1 தேங்காயை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வியாபாரம் செய்து

S/d K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

வருகிறார். சையது ரசீதின் நண்பர் ராஜ்குமார் எனது கணவர் அ.சா.1 ஐ சந்தித்து தேங்காய் வியாபாரம் செய்வது குறித்து போனில் மூலம் தகவல் கொண்டதன் பேரில் ராஜ்குமாருடன் சேர்ந்து துபாயில் உள்ள காக்ஸ் ஜென்ரல் டிரேடர்ஸ் நிறுவனம் சையது ரசீதிற்கு ராஜிவ் காந்தி கப்பல் மூலம் தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து அனுப்பி வைத்தார். ஏற்றுமதி தேங்காய்களுக்கு சையத் ரசீத் எந்தவிதமான தொகையும் கொடுக்கவில்லை. எனது கணவர் அ.சா.1 சையது ரசிதை போன் மூலம் தொடர்பு கொண்டு கேட்டபோது 99950 ரூபாய்க்கு காசோலையை சையது ரசித் எனது கணவருக்கு கொடுத்தார். மீதமுள்ள ஐந்து லட்சத்து தொள்ளாயிரத்தை சையது ரசிதிடம் கேட்டபோது கொடுப்பதாகக் கூறி துபாய் நாட்டின் இரண்டு காசோலைகள் ரூ.100000/- வீதம் இரண்டு காசோலைகளை கரூர் கனரா வங்கியில் தாக்கல் செய்த போது வங்கியின் பெயர் இல்லை என்று காசோலை திருப்பப்பட்டது. சையது ரசிதை தொடர்பு கொண்டபோது தருவதாக கூறினார். பிறகு தொகையை தரவில்லை. இது சம்மந்தமாக எனது கணவர் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் புகார் பதிவு செய்தனர். போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

S/d K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC.11/2023 SPLITUP FROM CC No. 175/2015
Evidence recorded u/s 299 crpc
Prosecution PW 3

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | இர்ஷாத் அகமது |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 18.03.2024

**எதிரிகள் 1 முதல் 3 ஆஜரில்லை. கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தாராபுரத்தில் குடியிருந்து சொந்தமாக டிராவல்ஸ் வைத்துள்ளேன். அ.சா.1 எனது மைத்துனர். தேங்காய் வியாபாரம் செய்து வந்தார். சையது ரசித் எனது உறவினர். அவரது மனைவி ரோசல்லா, அவரது அம்மா, ரசிதின் நண்பர் ராஜ்குமார் அவர்களை

S/d K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

எனக்கு தெரியும். சையது ரசிதின் நண்பர் ராஜ்குமார் எனது மைத்துனர் அ.சா.1 இடம் வெளிநாடுகளுக்கு வியாபாரம் செய்தால் நல்ல லாபம் கிடைக்கும் என கூறியதை நம்பி துபாயில் உள்ள ரசிதுக்கு காக்ஸ் நிறுவனத்திற்கு மதுரையிலிலுள்ள ராஜ்குமாரின் சஞ்சை டிரேடர்ஸ் மூலம் தேங்காயை தூத்துக்குடியிலருந்து ராஜிவ் காந்தி கப்பல் மூலம் ஏற்றி வைத்ததாகவும், அ்போது அவருக்கு 25000 ரூபாய் கொடுத்ததாகவும், அதன் பின்னிட்டு 150000/- ரூபாயை ராஜ்குமாரின் வங்கி கணக்கிற்கு அனுப்பி வைத்ததாகவும், பின்னர் 300000/- ரூபாயை அனுப்பி வைத்ததாகவும், சிப்டிங் சார்ச்சிற்காக 75000 ரூபாயை வாங்கியதாகவும், எனது மைத்துனர் கூறினார். தேங்காயை ஏற்றுமதி செய்த வகையில் 99950 ரூபாயை வாங்யிதாகவும், அதன் பின்னிட்டு எனது மைத்துனர் சையது ரசிமை தொடர்பு கொண்டபோது  தொகையை கொடுப்பதாக கூறினார். பொய்யான மெயிலை அனுப்பிவைத்தார். பின்னர் 10 வருடங்களுக்கு முன்பு ஒரு நான் நானும் எனது மைத்துனரும் மதுரையில் ரசிம் விட்டிற்கு சென்று கேட்டபோது துபாய் நாட்டின் இரண்டு காசோலையை எனது மைத்துனருக்கு கொடுத்தனர். அதை கரூர் கனரா வங்கியில் வசூலுக்கு போட்டபோது போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டது. இது குறித்து கேட்டபோது பணம் கொடுக்கவில்லை. இது சம்மந்தமாக அ.சா.1 கரூர் நகர குற்றப்பிரிவில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

S/d K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.